சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 15 /2015**

**நாள் : 19.12.2023**

**PW2 : சின்னச்சாமி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) வாதியின் கணவர், என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என்னை, வாதிதான் சாட்சியம் அளிக்க அழைத்தார். பிரமாண வாக்குமூலத்தை நான்தான் தயார் செய்தேன். அதிலுள்ள வழக்கு எண் எப்படி தெரியும் என்றால் எனக்கே நேரடியாக தெரியும். நான் ஆரம்பத்திலிருந்து என் அண்ணி வழக்கு நடத்துவதற்கு உதவியாக இருக்கிறேனா என்றால் இல்லை, தற்போதுதான் வருகிறேன். வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வாதியின் தகப்பனார் கருப்பண்ண கவுண்டர் மற்றும் நான் கூட்டாக பைனான்ஸ் செய்து வந்தோம் என்றால் அவ்வாறு இல்லை. பாலாஜி அருன் பைனான்ஸிற்கும், எனக்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் இல்லை. கருப்பண்ண கவுண்டர் தறி போட்டிருந்தாரா என்றால் தறி போடவில்லை. பருத்தி வியாபாரம் செய்தார்.

2) கருப்பண்ண கவுண்டரின் கையெழுத்தை பார்த்தால் தெரியுமா என்றால் தெரியாது. கருப்பண்ண கவுண்டர் எவ்வளவு முதலீடு போட்டு தொழில் செய்தார் என்று எனக்கு தெரியாது. அந்த முதலீடு எங்கிருந்து வந்தது என்று எனக்கு தெரியாது. கருப்பண்ண கவுண்டர் நல்ல உழைப்பாளி என்றால் சரிதான். 04.09.1941 அன்று கருப்பண்ண கவுண்டர் பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 1941 ஆம் ஆண்டில் கிரையம் பெற்ற சொத்துக்களை 1967 ஆம் ஆண்டு பாகக்கரார் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. கருப்பண்ண கவுண்டர் தன் பெயரில் சொத்துக்கள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. கருப்பண்ண கவுண்டரின் தந்தை பெயர் முத்துசாமி கவுண்டர் ஆகும். முத்துசாமி கவுண்டருக்கு 4 பெண்கள் மற்றும் 1 ஆண் மகன் உள்ளார் என்றால் தெரியாது. முத்துசாமி கவுண்டர் காலமாகி சுமார் 45 வருடம் இருக்குமா என்றால் எனக்கு தெரியாது.

3) கருப்பண்ண கவுண்டர் சொத்திற்கு வாய்க்கால் பாசனம் இல்லை என்றால் இல்லை

மானாவாரிதான். 1980 ஆம் ஆண்டு கடும் வறட்சியால் தென்னை மரங்கள் அனைத்தும் காய்ந்து போய்விட்டது என்றால் சரிதான். கருப்பண்ண கவுண்டர் சுயமாக சம்பாதித்த சொத்துக்களை குறித்து உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. செல்லமுத்து கவுண்டர் குடும்பத்துடன் நாங்கள் உறவாகத்தான் இருந்து வருகிறோம். மூன்றாம் பிரதிவாதி வெங்கடாசலத்திடம், எனக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றால் எப்போதாவது பேசுவோம். 2004 ஆம் ஆண்டு கருப்பண்ண கவுண்டர் நல்ல மனைநிலையிலும், உடல்நிலையிலும் இருந்தார் என்றால் சரிதான். அதன்பிறகு அவருக்கு உடல்நலம் சரியில்லாமல் ஆனது. கருப்பண்ண கவுண்டர் 2009 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். அவர் இறப்பதற்கு முன்பு 1 மாதம்தான் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. 2 ஆண்டுகளாக உடல்நலம் சரியில்லாமல் இருந்தார்.

4) கருப்பண்ண கவுண்டரின் மருத்துவ குறிப்புகளை நான் பார்த்ததில்லை. கருப்பண்ண கவுண்டரின் உடல்நலம் சரியில்லை என்று யார் சொல்லி தெரியும் என்றால் நான் நேரில் பார்த்தேன். எந்த தேதியில் பார்த்தேன் என்றால் சொல்ல முடியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை வெங்கடாசலம் தான செட்டில்மெண்ட் எழுதி வைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் வெங்கடாசலம் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் முழுமையான அனுபவம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது பரம்பரை சொத்து, அந்த அளவிற்கு தெரியும். கருப்பண்ண கவுண்டருக்கு முளையில் கட்டி ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறேன். அதற்கான ஆவணத்தை பார்க்கவில்லை, நான் மருத்துவமனையில் சென்று பார்த்தேன். மருத்துவமனையில் சொன்னார்கள்.

5) வெங்கடாசலம், ரத்தினத்தை சொத்தில் அனுபவம் செய்ய விடவில்லை என்றால் சரியல்ல. ரத்தினம் மாடு மேய்ப்பார் மற்றும் தீவனம் கொடுப்பார். அம்மணியம்மாளுக்கு, செல்லமுத்து வழியாக வந்த சொத்தை, 2-ம் பிரதிவாதியின் மக்களுக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்து விட்டார் என்றால் சரியல்ல. கருப்பண்ண கவுண்டர் வழக்கு சொத்தின் எந்தெந்த சர்வே எண்ணில், எப்பொழுது கிரையம் பெற்றார் என்று எனக்கு தெரியாது. 1962 ஆம் ஆண்டு கருப்பண்ண கவுண்டர் கிரையம் பெற்றாரா என்றால் எனக்கு தெரியாது. கிரையம் பெற்ற சொத்துக்களை வங்கியில் அடமானம் வைத்து கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு

தெரியாது. கருப்பண்ண கவுண்டர் காலம் ஆவதற்கு முன்பு வரை சொத்துக்களை அவர்தான் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். வாதி சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையில் பொது சொத்து என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) கருப்பண்ண கவுண்டரின் தந்தை முத்துசாமி கவுண்டருக்கு எந்த சொத்தும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வாதி கூட்டு அனுபவத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கருப்பண்ண கவுண்டர் உடல்நலம் சரியில்லாமல் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்ன பரிகாரத்திற்காக வழக்கு போட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது. வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.19 00:17:00 +0530

Subordinate Judge,
Avinashi.